بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

إِنَّ الدِّينَ عِنْدَ اللهِ الْإِسْلَامُ　　لَا إِلٰهَ إِلَّا اللهُ مُحَمَّدٌ رَسُولُ اللهِ

**FRIDAY SERMON – வெள்ளிக்கிழமை சொற்பொழிவு**

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

**20 January 2017 [20 Rabi'ul Aakhir 1438 Hijra]**

## OATH OF ALLEGIANCE - / பக்தி உறுதி மொழி



**சலாமிற்குப்பின் ஹஸ்ரத் கலீ∴பதுல்லாஹ் தஷஹுதும், தவத்தும், சூறா அல்∴பாத்திஹாவும் உருவிட் டப்பின் பக்தி உறுதிமொழி என்ற விஷயத்தைக் குறித்து கேரளாவில் மாத்துறையில் நூறுல் இஸ்லாம் மஸ்ஜிதில் தன்னுடைய வரலாற்று சிறப்புமிக்க வெள்ளிக் கிழமை சொற்பொழிவை துவங்கினார்.**

பக்தி உறுதிமொழி (பைய்யத்) எடுத்துக் கொண்டு ஜமாத்துல் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்த கேரளாவிலும், உலகின் மற்று பகுதியிலுள்ளவர்களிடமும், அறிவுரை வழங்குவது என்பது எனது கடமையாகும். எனக்கு முன்னால் வந்த ஹஸ்ரத் மஸீஹ் மவூத் மிர்ஸா குலாம் அஹமது (அ) கூறிய அதே விஷயம்தான் எனக்கும் கூறவுள்ளது. அதாவது நான் உண்மையான சேவகனும் அல்லாஹ்வின் தூதனுமாகின்றேன். நான் ஹஸ்ரத் முஹம்மது(ஸ) னுடையவும், ஹஸ்ரத் மஸீஹ் மவூத்(அ) னுடையவும் கீழ்ப்படிதலுள்ள சீடனாவேன். வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது(அ) - ன்



வேலையை தொடர்ந்து செயலாற்றுவதற்காக, இந்த எளியவனை இந்நூற்றாண்டின் கலீ∴.துல்லாவாக அல்லாஹ்(த) என்னை நியமித்துள்ளான், ஆகையால் எனது அன்பு தோழர்களே இங்கும் கேரளத்திலும், மற்று பகுதியிலுமுள்ள பக்தி உறுதிமொழி (பைய்யத்) செய்து ஜமாத்துல் சஹீஹில் இஸ்லாமில் நுழைந்தவர்களே, நான் உங்களை நினைவுபடுத்தட்டுமா! அதாவது ஆரம்பமே நன்மையின் விதைகள் விதைப்பது போலாகும். ஒரு தோட்டக்காரன் புதுசாக நட்ட தனது செடியை, விதையை பராமரிக்கவில்லையென்றால், நீரூற்றவில்லையென்றால், அவனுடைய செடிகள் அழிந்து விடும். அதுப்போல் அவன் செய்கின்ற நற்செயல்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்றால், அது நஷ்டமாகிவிடும். காரணம் சாத்தான் எப்பொழுதும் மனிதனோடு ஒன்றியே இருக்கின்றான். முஸ்லீம்கள் சார அனைத்து மக்களும் அவர்களின் மதத்தின் பொறுப்புகளை செய்கின்றனர். ஆனால் அவர்கள் எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை. காரணம் அவர்கள் முன்னேற்றத்தைக் குறித்து சிந்திக்கவில்லை. அவர்களின் செயல் வளையம் அதிக நற்செயல்களால் ஆற்றல் பெறவில்லை. ஆகையினால் தான் அவர்களின் செயல்கள் யாவும் சடங்கு சம்பிரதாயங்களில் மட்டுமாகின. தற்பொழுது முஸ்லீம் குடும்பத்தில் ஒருவர் பிறந்தால், அவன் கலிம உருவிட துவங்குகின்றான். அதாவது ஷஹாதத், அதாவது நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். இனி அவன் ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறந்தால் அவன் ராம், கிருஷ்ணா என துதிப்பாடல்கள் உருவிடுகின்றான். நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். பச்சாதாபம் செய்துவிட்டு ஆரம்பம் குறிக்கும்போது அது பெரும் அருட்களுக்கு துவக்கமாயிற்று. இந்த வாக்குறுதியின்படி, இம்மையை விட மறுமைக்கே (தீன் விஷயத்திற்கு) முக்கியத்துவம் வழங்கும்போது, அங்கு முன்னேற்றம் ஏற்படுகின்றது. விஷயம் இவ்வாறு இருந்தாலும், இந்த வாக்குறுதி முழுமையடைதல், அதாவது நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது உங்களுடைய மட்டும் கட்டுப்பாட்டில் உள்ள விஷயமல்ல. இதை அடைவதற்கு இறைவனின் உதவி மிக அவசியமாகும். **அல்லாஹ்(த) பரிசுத்த குர்-ஆனில் கூறுகின்றான். மேலும் எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம், நிச்சயமாகவும் அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்.** (29:70)

அதாவது நம்முடைய மார்க்கத்தில் கடின முயற்சி செய்பவர், இறுதியில் அவர் நேரான வழியில் எத்திப்படுவர். உதாகரணமாக ஒரு சிறு விதையை எடுத்துக்கொள்வோம், அது நீரின்றி ஓரிடத்தில் கிடந்தால், பாதுகாப்பற்ற நிலையில் கிடந்தால் அதில் நின்று எந்த பயனும் கிடைப்பதில்லை. அது அழிந்து போவதுமாகும். உங்களுடைய விஷயமும் அப்படித்தானே, ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்த வாக்குறுதியைப் பற்றி சுயமாக உணரவில்லையென்றால் (நம்பிக்கைக்கு முன்தூக்கம் அளிப்போம் என்ற வாக்குறுதி) உதவிக்காகவும், அருளிற்காகவும் பிரார்த்தனை மூலம் நீங்கள் அல்லாஹ்விடம் விண்ணப்பிக்கவில்லையென்றால் என்ன பலன்தான் உங்களில் நின்று வெளிவருவது. விதைகள் அழிந்துபோவதை காணவில்லையை? அல்லாஹ்வின் உதவியில்லாமல் மாற்றம் ஏற்படுவது சாத்தியமன்று. திருடர்களும், பெண்களிடம் தகாத முறையில் உறவு வைத்திருப்பவர்களும், மற்றும் தீயச்செயல்களில் ஏற்படுகின்றவர்களும் எப்போதும் ஒரே நிலையில் வசிப்பதில்லை. சில நேரங்களில் அவர்களும் அவர்களின் உள்ளத்தின் நிலையைப்பற்றி சிந்திக்கின்றனர். நெறியற்ற செயல் செய்கின்ற ஒவ்வொருவருடைய நிலைமையும் இதுதான். இது நம்மை எதை கற்பிக்கின்றது? நன்மை செய்வதற்கான விருப்பம் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இருக்கின்றது. ஆனால் அது செயல்வடிவில் வரவில்லை. இத்தகைய மனிதர்களுக்கு இறைவனின் மிகப்பெரிய உதவி அவசியமாகும். அக்காரணத்தினால்தான் தினசரி ஐந்து வேளை தொழுகையில் சூறா அல்.்.பாத்திஹா ஓதுவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்டிருக்கின்றது. **உன்னையே நாங்கள் வணங்குகிறோம். உன்னிடமே நாங்கள் உதவியை வேண்டுகிறோம்.** (1 : 5) இவ்வசனம் இரண்டு விஷயங்களில் விரல் சூண்டுகிறது. ஒவ்வொரு நற்செயல் செய்வதற்கும் ஒருவன் அவனுடைய எல்லா திறமைகளையும் உபயோகப்படுத்தவேண்டும்; அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்; அதற்காக நல்ல திட்டங்களை தீட்டவேண்டும் (பிரார்த்தனையோடு) நக்புது என்ற வார்த்தையில் இதைத் தான் சுட்டிக்காட்டப்படுகிறது. நக்புது, நாங்கள் வணங்குகின்றோம். ஒருவர் வணக்கத்திற்குரிய சொற்களை ஓதுகின்றார் என்றிருக்கட்டும், பின் அத்துடன் முயற்சிகள் ஒன்றும் மேற்கொள்ளவில்லை என்றிருக்கட்டும் அவனால் எந்த பலனும் அடைய முடிவதில்லை. உதாகரணமாக ஒரு விவசாயியை எடுத்துக்கொள்வோம். அவன் நட்ட செடிகளுக்கு எவ்வித பாதுகாப்பும் கொடுக்கவில்லையென்றால், அதில் நின்று கனிகள் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு மூடமாகும்.

இதுதான் இறை நடைமுறை. ஒரு விதை விதைத்தால் அது வளருவதற்காக பிரார்த்தனை மட்டும் செய்தால், அவனுக்கு எவ்வித பலனும் கிடைப்பதில்லை. உதாகரணமாக இரண்டு விவசாயிகளை எடுத்துக்கொள்வோம்! ஒருவன் கடினமாக உழைத்து தன்னுடைய பூமியை நல்ல முறையில் உழுது கிருஷி செய்கின்றான். நிச்சயமாகவும் அவனுக்கு நல்ல பலன் கிடைக்கின்றது. மற்று விவசாயி, அவன் கடினமாக உழைக்க ஆயத்தமில்லை அல்லது கொஞ்சம் மட்டும் உழைக்கின்றான். அவனது தோட்டத்தில் மிகச்சிறிய அளவிலான பிரதிப்பலன் மட்டுமே கிடைக்கின்றது. அது அரசிற்கு கொடுக்கும் நில வரிக்கே போதுமானதல்ல. அவன் என்றும் ஆண்டியாகவே இருப்பான்.

நம்பிக்கையின் விஷயத்திலும் இந்த அவலம்ந்தான். நம்பிக்கையாளர்களின் மத்தியில், நயவஞ்சகர்களும், எவ்வித பலனற்றவர்களும் இருக்கின்றனர். அதே நம்பிக்கையுடைய சமூகத்தில்தான், நம்மால் புனிதர்களையும், தூயமானவர்களையும், சூ.ஃபிமார்களையும், இறைப் பார்வையில் அத்தகைய பதவி வகிப்பவர்களையும் காணலாம். 40 வருடத்திற்கு மேலாக தொழுகையை நிலைநாட்டுபவர்கள் சிலரையும் காணலாம். என்றிருந்தாலும் ஆரம்பம் முதல் இன்றளவும்வரை எவ்வித மாற்றமும் அடையாதவர்! 30 நாட்கள் நோன்பு நோற்றதின் மூலம் எந்த பலனும் பெறாதவராவார்கள். சிலர் கூறுகின்றனர் அவர்கள் புனிதர்கள் ஆவர் என்றும், அவர்கள் வெகுநேரம் பிரார்த்தனை செய்கின்றவர்களென்றும், அவ்வாறிருந்தும் அல்லாஹ்வில் நின்று ஏதாவது உதவி கிடைத்ததற்கான எவ்வித அடையாளமும் அவரில் காணவில்லை. அதன் காரணம் அவர்கள் பூர்விகமாக செய்துவந்த விஷயங்கள் செய்கின்றனர் என்று பொருள்! அவர்கள் முன்னேற்றத்தைக் குறித்து நினைப்பவர்களல்ல. ஆகையால் அவர்கள் வாசப்படியிலே நிற்கின்றனர். அத்தகைய மனிதர்களின் நிலை மிருகத்தின் நிலையில் நின்று சிறிதும் மாறுப்பட்டதல்ல. அத்தகைய மனிதர்களின் தொழுகை அவர்களுக்கு இறைவனிடம் நின்று ஆக்கினையை மட்டுமே இறக்கிக் கொடுக்கின்றது.

உண்மையான தொழுகை, என்பது அதனுடன் முன்னேற்றம் கொண்டுவருவதாகும். ஒரு மருத்துவர் சிகிட்ச்சை அளிக்கும் நோயாளியின் பிணி குணமடைகிறதா அல்லது நோய் முற்றிப்போகிறதா என்று ஆராய்வதாகுமிது, கொஞ்சம் நாட்களுக்குப்பின் நோயாளியின் பிணி மாறவில்லையென்றால், மருத்துவர் மருந்தை மாற்றி புதிய

மருந்தைக் கொடுக்கின்றார். இதுபோல் பாரம்பரியமான வணக்க முறையை பின்பற்றுவது என்பது அதன் சரியான மாற்று மருந்தல்ல. தொழுகையை நிலைநாட்டுவதுடன் நபிகள் நாயகம் (ஸ) வின் மேல் ஸலவாத்து சொல்வதும் சிறப்புக்குரியதாகும். உங்களது மொழியிலும் சொல்லலாம். இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் உங்களுக்கு முன்னேற்றம் அடைய முடிவதில்லை. தொழுகையை நிலைநாட்டும்பொழுது உங்களின் மனமும், இருதயமும், பண்பினானும், பிரார்த்தனையினாலும் பிணைந்து நிற்கவேண்டும். உங்களின் மனம் உறுதியோடும், அமைதியோடும் அல்லாஹ்வின் முன்பாக நிற்கவேண்டும். இவ்வாறு மன உருக்கத்துடன் சமர்ப்பிக்கின்ற பிரார்த்தனைகள் உங்களின் பாவங்களை கழுவி மாற்றிவிடுகின்றது. இது அல்லாஹ்(த) கட்டளையில் உட்பட்டதாகும்.

ஆகையால் எனது அன்பு தோழர்களே! நீங்கள் பூரணமாக ஆராதனையில் மூழ்கிவிடுங்கள். அல்லாஹ்விடமுள்ள பக்தி பரவசத்தால் பிணைந்து விடுங்கள். எல்லா ஆற்றலும் பெற்ற அல்லாஹ்வின் அன்பின் கருணையை ருசிப்பதற்கு இறை தடாகத்தில் நீங்கள் குதிக்க வேண்டியுள்ளது. அல்லாஹ்(த) அவனை மட்டுமே வணங்க உங்களிடம் உத்தரவிடுகின்றான். நீங்கள் எந்த மாய தோற்றக்காரர்களையும் (பொய்தெய்வங்கள்) அவனோடு இணைக்கக்கூடாது. அல்லாஹ்வின் வழியில் உங்கள் முன்பாக எந்த உருவங்களும் இருக்கக்கூடாது என நான் விரும்புகின்றேன். எப்போதெல்லாம் அல்லாஹ் உங்களை அழைப்பானோ அப்போதெல்லாம் அவனை சந்திப்பதற்கு எவ்வித இடையூறுகளும் இருக்கக்கூடாது.

அல்லாஹ்வை தரிசிப்பதற்கு மிக நேர்மையான சிறந்த வழி பிரார்த்தனை மட்டும்ந்தான். அல்லாஹ்(த) அந்த மாபெரும் தரிசன பாக்கியத்தை நமக்கு ஐந்து வேளை தந்திருளியிருக்கின்றான். ஆகையால் நீங்கள் அல்லாஹ்விடம் உண்மையாக இருங்கள். தூதருக்கு கீழ்ப்படியுங்கள். இந்நூற்றாண்டில் உங்களுக்காக அவன் அனுப்பியிருக்கும் கலீ∴பதுல்லாவை பின்பற்றுங்கள். நீங்கள் மீட்சி பெறுவீர்கள்! இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ்(த) உங்கள் யாவருக்கும் அருள் செய்வானாக! எனது இந்த இந்திய பயணவேளையில் அவனது அருட்களை பொழிவானாக! குறிப்பாக கேரளாவிலுள்ள மாத்திறையில்! அல்லாஹ்வின் மார்க்கத்தில் இந்நூற்றாண்டில் பெரும் பெரும் புது திட்டங்கள் ஏற்படுத்துவதற்கு அல்லாஹ் உங்களின் உள்ளங்களை ஊக்குவிப்பானாக!

தரணியில் உங்களின் இறுதி மூச்சுவரை அதை தக்கவைத்து தருவானாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.




**Issued by:**

**R. Jamaluddin Raother**

Amir Jamaat Ul - Sahih Al Islam

South Zone, Kerala A693/2010





**Translated by:**

**Mohamed Sudheer. I**

Ph: 9659884310

**E-mail:** abdulsuthi9@gmail.com

بسم الله الرحمن الرحيم

إن الدين عند الله الإسلام    لا إله إلا الله محمد رسول الله

# FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா 20/01/2017

*(20 Rabi-ul-Aakhir 1438 Hijira)*

## OATH OF ALLEGIANCE/ பக்தி வாய்ந்த உறுதிமொழி



### Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

(கேரளா மாநிலம் - மாத்திரை **"நூறுல் இஸ்லாம்"** மஸ்ஜித்தில் வைத்து இந்நூற்றாண்டின் இறைத் தூதர் ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் ஆங்கில மொழியில் ஆற்றிய வரலாற்று மிக்க ஜுமா பேருரையின் தமிழாக்கம்).

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்வுசும் சூராஅல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தன் உரையினை ஆரம்பித்தார்.

பை-அத் செய்து ஜமாஅத்துச்சஹீஹில் இஸ்லாமில் இணைந்த கேரளாவிலும் உலகின் மற்ற பகுதிகளையும் சார்ந்த தோழர்களுக்கு உபதேசம் வழங்கிக் கொள்தல் என்பது என் கடமையாகும். எனக்கு முன் தோன்றிய ஹஸ்ரத் மஸீஹெ மௌஊத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் கூறிய

அவ்விஷயங்களைத் தான் எனக்கும் உங்களிடம் கூறிக்கொள்ள வேண்டியது. அதாவது நான் உண்மையாளரான சேவகனும் அல்லாஹ்வின் தூதருமாகயிருக்கின்றேன். நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்)வுக்கும் ஹஸ்ரத் மஸீஹெ மௌஊத் (அலை) க்கும் கட்டுபடுகின்ற தோழனாகயிருக்கின்றேன். இந்த எளியவனை இக்காலகட்டத்தில் அல்லாஹ், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) மின் வேலையை தொடர்ந்து செய்வதற்கு இறைவனின் கலீ:.பா என்ற நிலையில் என்னை நியமித்திருக்கின்றான். ஆகவே கேரளாவையும் உலகின் மற்ற பகுதிகளையும் சார்ந்த எனது பிரிய தோழர்களே, பை-அத்து செய்து ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமில் பிரவேசித்துக்கொண்டோர்களே நான் உங்களை நினைவூட்டுகின்றேன்! அதாவது ஆரம்பித்துக் கொள்தல் என்பது நன்மையின் விதை விதைத்துக் கொள்தல் போலாகும். ஒரு தோட்டக்காரன் புதியதாக நட்டுக் கொண்ட செடிகொடிகளை பாதுகாக்காமலிருந்தால், அதன் தேவைக்கேற்ப தண்ணீரளிக்காமலிருந்தால் அவருக்கு அச்செடி கொடிகளை இழக்க நேர்கின்றது. அதைப் போன்றே சாத்தான் எந்நேரமும் மனிதர்களிடத்தில் இருக்கின்றான். அதனால் மனிதன் செய்கின்ற நற்செயல்களை சுயம் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் அவர் சுயம் மேற்க்கொள்ளாமலிருந்தால் அந்த நற்செயல்களை அவருக்கும் இழக்க நேர்கின்றது. முஸ்லீம்கள் உட்பட்ட அனைத்து மதப்பிரிவினை சார்ந்த மக்களும் தங்களின் மத கடமைகளை செய்திருந்தும் எவ்வித முன்னேற்றத்தையும் அடைவதற்கு அவர்களுக்கு இயலாமலிருக்கின்றது. காரணம் முன்னேற்றத்தைக் குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. அவர்கள் தங்களின் செயல்துறையினை மேலும் மிக நற்செயல்களால் மேம்படுத்திக் கொள்வதில்லை. அதனால் தான் அவர்களின் செயல்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களிலும் சடங்கு சம்பிரதாயங்களிலும் மட்டும் சுருங்கிக் கொண்டது. அதன் பலனாக ஒருவர் முஸ்லீம் குடும்பத்தில் பிறவி கொண்டால் அவர் **"ஷஹாத கலிமா"** அதாவது நம்பிக்கை மொழி கூறிக்கொள்ள ஆரம்பிக்கின்றார். ஆனால் அவர் ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறவியெடுத்திருந்தால் ராம் கிருஷ்ணா என்ற புகழ்ச் சொல் கூறிக்கொள்ள துவங்குகின்றார். பாவமன்னிப்பு கோரிக்கொண்டு ஆரம்பித்துக் கொள்ளும் பொழுதே அது மிக சிறந்த அருளுக்குரிய ஆரம்பம் என நீங்கள் உணர வேண்டும். இந்த உறுதிமொழியின் படி இவ்வுலக வாழ்க்கையை விட மறு உலக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொழுது அங்கு முன்னேற்றம் கிடைத்து விடும். விஷயம் இவ்வாறு இருந்தாலும் இந்த உறுதிமொழியின் படி அதாவது நம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளித்துக் கொள்தல் என்பது முற்றிலும் உங்களின் கட்டுப்பாட்டுக்குள் நிற்கும் விஷயமல்ல. இதை அடைந்து விட இறைவனின் உதவி மிக அதிகம் தேவையாக இருக்கும். அல்லாஹ் திருக்குர்ஆனின் வாயிலாக தெரியப்படுத்திக் கொள்கின்றான்.

**"எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான வழிகளில் நாம் செலுத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோருடனேயே இருக்கின்றான்"** (29 : 70)



அதாவது நம்முடைய வழியில் முயல்கின்றோர்கள் அவர் முடிவில் நேரான வழியினை அடைந்திடுவார்கள். ஊதாரணமாக, ஒரு சிறு நெல்மணியை எடுத்துக் கொள்வோம். அது தண்ணீரின்றி ஓர் இடத்தில் கிடந்தால், அல்லது அது பாதுகாப்பின்றி ஓர் இடத்தில் இருந்தால் அதிலிருந்து எந்த பலனும் கிடைப்பதில்லை. அது நாசத்தை அடைந்துவிடும். அதை போன்றல்லவா உங்கள் விஷயமும்? நீங்கள் செய்த உறுதிமொழியைக் குறித்து அனுதினம் உணராமலிருந்தால் பிரார்த்தனை வழியாக நீங்கள் அல்லாஹ்விடமிருந்துள்ள உதவிக்கும் அருளுக்குமாக மன்றாடிக் கொள்ளாமலிருந்தால் உங்களிலிருந்தும் எவ்வித பலனும் வெளிப்படுவதில்லை. நெல்மணி நாசத்தை எட்டிவிடுவதை காண்பதில்லையா? அல்லாஹ் வின் உதவியில்லாமல் எவ்வித மாற்றமும் அடைய முடியாது.

கள்வர்களும் விபசாரிகளும் மற்ற தீய செயல்களில் ஏற்பட்டுக் கொள்வோர்களும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள். அவர்களும் சில நேரங்களில் அவர்களின் உள்படையான(ஆன்மீகம்) விஷயங்களைக் குறித்து சிந்திப்பவர்கள் ஆவார்கள். தீய செயல்களில் ஏற்ப்பட்டுக் கொள்ளும் ஒவ்வொரு நபர்களின் நிலையும் இதுவாகும். இவ்விஷயம் நம்மை கற்பிப்பது என்ன? ஒவ்வொரு மனிதர்களிலும் நன்மை செய்வதற்கான விருப்பம் உண்டு என்றாகும். ஆனால் அது செயலில் வருவதில்லை. இவ்வகையாளர்களுக்கு இறைவனின் மிக பெரிய உதவி தேவையாகும். ஐந்து நேர தொழுகையிலும் சூரா : அல் பாத்திஹாவை ஓதிக்கொள்ள கட்டளை விடுத்ததும் அதனாலாகும். அதில் காணலாம் **"உன்னையே நாங்கள் வணங்குகின்றோம் உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகின்றோம்."** (1 : 5) இந்த வசனம் இரண்டு விஷயங்களை உணரச் செய்கின்றது. ஒவ்வொரு நற்செயலும் செய்வதற்கு ஒருவர் அவனது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்த வேண்டும். எல்லா வித முயற்ச்சியும் மேற்க்கொள்ள வேண்டும். அதற்காக நல்ல திட்டம் தீட்ட வேண்டும் **"நஆபுது"** என்ற வார்த்தை குறிப்பிடுவது இதுவாகும். **"நஆபுது"** நாங்கள் வணங்குகின்றோம். ஒருவர்

பிரார்த்தனை செய்கின்றார் என்றிருக்கட்டும் ஆனால் தொடர்ந்து முயற்ச்சி செய்யாமலிருந்தால் அவருக்கு எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. ஒரு விவசாயியின் உவமையை எடுப்போம். அவர் விவசாயம் செய்த பொருள்களுக்கு எவ்வித பராமரிப்பும் வழங்காமலிருந்தால், அதிலிருந்து பலன் கிடைத்து விடும் என்ற எதிர்பார்ப்பும் முட்டாள்தனமாகும்.





இதுவேயாகும் இறைவனின் சுன்னத். ஒரு விதை விதைத்தால் அது முளைத்துக் கொள்வதற்கு பிரார்த்தனை மட்டும் செய்தால் அவருக்கு பலன் கிடைப்பதில்லை. உதாரணமாக, இரண்டு விவசாயிகள் இருக்கின்றனர் என எண்ணுவோம். அதில் ஒருவர் மிக கடினமாக உழைக்கின்றார். தன் பகுதியை உழுது மிக நன்கு விவசாயம் செய்கின்றார். நிச்சயமாக அதில் அவர் வெற்றியடைவார். மற்றவர் கடினமாக உழைக்க தயாராகவில்லை. அல்லது மிக குறைந்த அளவில் உழைக்கின்றார். அதன் காரணமாக அவருக்கு சிறிதளவிலான பலன் மட்டுமே கிடைக்கின்றது. அது அரசாங்கத்திற்கு சுமத்த வேண்டிய நிலவரிப்பணத்திற்கு கூட ஆவதில்லை. அவர் எப்போதும் வறுமையடைந்தவராகவே இருப்பார்.

நம்பிக்கையின் விஷயமும் இதுவேயாகும். நம்பிக்கையாளர்களின் மத்தியில் நயவஞ்சகர்களும் பயனற்றவர்களும் உண்டு அதே நம்பிக்கையாளர்களின் மத்தியில் தூய்மையானவர்களும் நற்குணமுடையவர்களும் சூபியாக்களும் உண்டு. 40 வருடங்களுக்கு மேலாக பிரார்த்தனை செய்து வருகின்ற சிலரை காணலாம். என்றிருந்தும் இதுவரையில் எவ்வித மாற்றமும் அடைய முடியாதவர்கள். 30 நாட்கள் நோன்பு நோற்றும் எவ்வித பலனும் அடையாதவர்கள். அவர்களைப் பற்றி சிலர் கூறிக் கொள்கின்றார்கள், அவர்கள் பக்தியுடையவர்கள் என்றும், அவர்கள் மிக அதிக நேரம் பிரார்த்தனை செய்தோர்கள் என்றும். என்றிருந்தும் இறைவனிடமிருந்து எதாவது உதவி

அவர்களுக்கு கிடைத்ததாக எந்த அடையாளமும் அவர்களில் கண்டு கொள்ள முடிவதில்லை. அதன் காரணம் அவர்கள் பாரம்பரியமாக செய்துவந்த விஷயங்களை செய்கின்றனர் என்று மட்டும். அவர்கள் முன்னேற்றத்தைக் குறித்து சிந்திப்பவர்களல்ல. அதனால் அவர்கள் முதல் படியின் பாலே நிலைகொள்கின்றனர். அவ்வகை நபர்களின் தொழுகை, அவர்களுக்கு இறைவனிடமிருந்து தண்டனை மட்டுமே இறங்க வழிவகுப்பது.

உண்மையான தொழுகை, முன்னேற்றத்தை வரவழைக்கின்றது. ஒரு மருத்துவர் சிகிட்சை அளித்து வரும் ஒரு நோயாளியின் நோய் விலகிக் கொள்கின்றதா அல்ல நோய் அதிகரிக்கின்றதா? என்று பார்வையிடுவது போலாகும். சற்று தினங்களுக்கு பிறகு நோயாளியின் நோய் விலகிக் கொள்ளவில்லையென்றால் மருத்துவர் அந்த மருந்துக்கு பதிலாக நவீனமான வேறொரு மருந்தை அளிப்பார். அதைப் போன்றே, பரம்பரையான இபாதத்தை கடைபிடித்துக் கொள்தல் என்பதும் அதற்கு சரியான சிகிட்சையல்ல தொழுகையை கடை பிடிப்பதோடு நபிகரீம் (ஸல்) மீது சலாத் சொல்வதும் மிக நன்றாகும். உங்களின் மொழியிலேயே அதை கூறிக் கொள்ளலாம். இவ்வாறு நீங்கள் செய்யாமலிருந்தால் உங்களுக்கு முன்னேற்றமடைய முடியாது. தொழுகையில் ஈடுபடும் பொழுது உங்கள் இதயமும் மனதும் எளிமையுடன் அப்பிரார்த்தனையில் ஒன்றிணைந்துக் கொள்ளவேண்டும் என்பது அல்லாஹ் வின் கட்டளையாகும். அல்லாஹ் வின் முன் மனக்கட்டுபாடுடன் சமர்பித்துக் கொள்கின்ற உங்களின் தொழுகை உங்களின் பாவங்களை முற்றிலும் விலகச் செய்துவிடும்.

ஆகவே என் அன்புக்குரிய தோழர்களே! நீங்கள் முழுமையாக பிரார்த்தனையில் மூழ்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் வின் மீது ஆழமான பக்தியுடன் உருகிசேருங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அன்பும் பாசமும் அருந்திக்கொள்ள இறைசமுத்திரத்தின்பால் நீங்கள் இறங்கிசெல்ல வேண்டும். அல்லாஹ்வை மட்டும் வணங்கிட அவன் உங்களிடத்தில் கட்டளையிடுகின்றான். எவ்வித பங்காளிகளையும் அவனுக்கு இணையாக்காமல் இருங்கள். அல்லாஹ்வின் வழியில் தடங்கல் ஏற்படுத்தும் எதுவும் உங்களில் இருக்கக் கூடாது என்பதே என் எண்ணமும். எப்போதெல்லாம் அல்லாஹ் உங்களை அழைத்துக் கொள்கின்றானோ அப்போதெல்லாம் அவனை அடைய எவ்வித பிரதிபந்தமும் உங்களிடம் இருக்க கூடாது.

அல்லாஹ்வை தரிசித்துக் கொள்வதற்கு முற்றிலும் உண்மையான வழி பிரார்த்தனையாகும். அனுதினம் ஐந்து வேளை அத்தரிசன வசதி அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கின்றான். அதனால் நீங்கள் அல்லாஹ்விடம் நேர்மையுடன் இருங்கள். இறைத்தூதருக்கு கட்டுப்பட்டுக் கொள்ளுங்கள். இந்நூற்றாண்டில்

உங்களுக்காக அல்லாஹ் தோற்றுவித்திருக்கும் கலீ:.பத்துல்லாஹ்வை பின்பற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் மோட்ஷத்தை அடைந்து விடுவீர்கள்! இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் உங்கள் அனைவர்களின் மீதும் அருள் பொழிவானாக! என்னுடைய இந்த இந்திய சுற்றுப்பயணத்தின் போதும் அவன் அருட்களை பொழிவானாக! குறிப்பாக கேரளா மாநிலத்தில் இந்த மாத்திரையிலும்! அல்லாஹ் வின் வழியில் இந்நூற்றாண்டில் மிக பெரிய ஆரம்பங்களுக்கான வழி வகுத்திட அல்லாஹ் உங்களின் இதயங்களை உணரச் செய்வானாக! பூமியில் உங்களின் இறுதி மூச்சு வரையில் அதை நிலைநாட்டிக் கொள்வானாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated By:**



**Mohammed Sabir**
**E-mail:** mohammedsabir2542@gmail.com

**Proof Reader:**



**Azim Ahmad**
**Mob. No:** 9789180817

**Issued by:**
**Jamaat Ul Sahih Al Islam**
Dawa Department
Tamil Nadu, India (Regd.No.A/693)
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com